**<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF,</u>**
**<u>Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),</u>**
**<u>District Munsif, Arni.</u>**
**<u>O.S. 210/2013</u>**

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் செவ்வாய்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.2 தாமோதரம், வயது 70, த/பெ அருணாசலம்**

**<u>குறுக்கு விசாரணை</u>**

**நேரம் 12.30**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் பட்டு தொழில் செய்து வருகிறேன். நான் நில புரோக்கராக இருந்து வருகிறேனா என்றால் இல்லை. மீனாட்சி சுந்தரம் என்னுடைய உறவுக்காரர் என்றால் சரியல்ல. நண்பர் ஆவார். அவர் 30 வருட காலமாக நண்பராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். மீனாட்சி சுந்தரம் எந்த ஊரில் வசித்து வருகிறார் என்றால் சொந்த ஊர் போளூர் தாலுக்கா, கீழ்பட்டு கிராமத்திலிருந்து தற்போது ஆரணி தாலுக்கா, முள்ளிப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறார்.

2. அவர் முள்ளிப்பட்டு கிராமத்தில் எத்தனை வருட காலமாக வசித்து வருகிறார் என்றால் 20 வருட காலமாக வசித்து வருகிறார். மேற்படி மீனாட்சி சுந்தரம் என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் பட்டு சேலைக்கு டிசைன் செய்யும் வேலை செய்து வருகிறார். ஆகையால் நானும் பட்டு வியாபாரம் செய்து வருவதால் மேற்படி மீனாட்சி சுந்தரம் பட்டு சேலைக்கு டிசைன் செய்யும் வேலை செய்து வருவதால் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான்.

3. மேற்படி மீனாட்சி சுந்தரம் ராஜேந்திரன் என்பவரிடமிருந்து வாங்கிய கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான்தான் முன் நின்று மேற்படி இருவருக்கும் ஏற்பட்ட கிரையத்தை பேசி முடித்து வைத்தேன் என்றால் சரிதான். மேற்படி ராஜேந்திரனும் எனக்கு நண்பர் என்றால் சரிதான். தொழில் ரீதியாக அவர் எனக்கு நண்பர் ஆவார். எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் ஏற்பட்டது என்றால் 1 சதுர அடி ரூபாய் 950/- எனவும், ஆனால் அரசு மதிப்பு அதை விட குறைவாக இருந்தது.

4. மேற்படி கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். கிரைய பத்திரத்தில் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் செய்திருப்பதாக

குறிப்பிட்டுள்ளது என்றால் அதைப் பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றொரு சாட்சி கையொப்பம் செய்தவர் யார் என்றால் அதைப் பற்றி தற்போது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிரைய பத்திரத்தை யார் எழுதினார் என்றால் ஆரணியை சேர்ந்த ரமேஷ் என்பவர் மேற்படி கிரைய பத்திரத்தை எழுதினார்.

5. மேற்படி கிரைய பத்திரத்தை எழுதிய அன்றே பதிவு செய்யப்பட்டதா என்றால் தற்போது போல் டோக்கன் இல்லாத காரணத்தால் அன்றே கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டது. எனக்கு கிரைய பத்திரத்தில் உள்ள சொத்து விவரங்கள் பற்றி தெரியுமா என்றால் அனைத்தும் தெரியும். மேற்படி சொத்து விவரத்தில் எத்தனை மனைப் பிரிவுகள் கிரையம் பெறப்பட்டன என்றால் 6 ஆகும். மேற்படி 6 மனைகளுக்கும் ஒவ்வொரு மனைக்கும் நீளம், அகலம் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஒவ்வொரு மனைக்கும் ஜக்பந்திகள் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. மொத்தம் எத்தனை மனைகள் அந்த நிலத்தில் போடப்பட்டது என்றால் 20 மனைகள் போடப்பட்டது. பொதுவாக நிலத்தில் மனைகள் போடப்பட்டால் வரைபடம் இருக்கும் என்றால் சரிதான். வரைபடத்தில் மனையின் எண்கள் மற்றும் தெருவுடைய நீளம், அகலம் அனைத்து விவரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தில் 2 பக்கத்திற்கும் ரோடு உள்ளது. மேற்படி வரைபடம் முள்ளிப்பட்டு பஞ்சாயத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. நான் உடன் இருந்து மேற்படி வரைபடத்தை பார்த்து இருவருக்கும் கிரையம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். கிரையம் கொடுத்த ராஜேந்திரன் என்பவருக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அண்ணன் ராமலிங்கம் சொத்தை தம்பி ராஜேந்திரனுக்கு பாகமாய் 6 மனைகளை மட்டும் கொடுத்தார். அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சாட்சி தன்னிச்சையாக பட்டாவையும் நான் பார்த்தேன் என்று பதில் அளிக்கிறார்.

8. **வழக்கறிஞர் தற்போது கிரைய பத்திரத்தை பாகப் பிரிவினை பத்திரமாக மாற்றம் செய்தார்.** அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் பாகப்பிரிவினை பத்திரம் இல்லை. கிரைய பத்திரமாக இருந்தது. அதைதான் நான் பார்த்தேன். மேற்படி அண்ணன் ராமலிங்கம் தம்பி ராஜேந்திரனுக்கு ஏற்படுத்திய கிரைய பத்திரம் எவ்வளவு ரூபாய் என்றால் தற்போது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி கிரைய பத்திரத்திலும் ஒவ்வொரு மனைக்கும் மொத்தம் 6 மனைகளின் ஜக்பந்திகள், நீளம், அகலம் குறிப்பிட்டு கிரையம் பெறப்பட்டது என்றால் சரிதான்.

9. ராமலிங்கத்திற்கு 2ம் பிரதிவாதி இந்தியன் வங்கி எழுதி கொடுத்த பத்திரத்தை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்திலும் 20 மனைக்கு ஜக்பந்திகள், நீளம், அகலம் குறிப்பிட்டு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நான் மேற்படி 2ம் பிரதிவாதியாகிய இந்தியன் வங்கி ராமலிங்கத்திற்கு எழுதி கொடுத்த பத்திரம் மற்றும் ராமலிங்கம் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்த பத்திரத்தையும் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் பார்த்தது உண்மைதான்.

10. ராஜேந்திரனும், 5ம் பிரதிவாதியாகிய மீனாட்சி சுந்தரமும் உறவுமுறைக்காரர் என்றால் சரியல்ல. மேற்படி 2 நபர்களும் உறவினர்கள்தான் என்பதால் நாமகர்த்தமாக (without consideration) ஒரு ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பு வருவாய் துறை ஆவணங்களை நான் சரி பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி வருவாய் துறை அனைத்து ஆவணங்களிலும் விளை நிலம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

11. தற்போது வரை மேற்படி நிலங்கள் விளை நிலமாகதான் உள்ளது என்றாலும், மனை பிரிவுகளாக பிரிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. மனைபிரிவுகளாக பிரித்து கல் நடப்பட்டுள்ளது. மேற்படி எனது முதல் விசாரணையில் மீனாட்சி சுந்தரம் 6 வீட்டு மனைகளை சுற்றி கல் கம்பம் நட்டு, இரும்பு கம்பி வேலி அமைத்து ஆரணி டூ போளூர் ரோட்டு பக்கம் இரும்பு கேட் போட்டு பூட்டி வைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நான் கூறியது போல் எந்த அபிவிருத்தியும் மீனாட்சி சுந்தரம் செய்யவில்லை என்றால்

சரியல்ல. நான் மேற்படி நிலத்தை பார்த்ததில்லை, ஆனால் பார்த்தது போல் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நிலத்தை பார்த்தது உண்மைதான். நான், மீனாட்சி சுந்தரம், ராமலிங்கம் மற்றும் ராஜேந்திரன் 4 பேரும் நண்பர்கள் என்பதால் ஆவணங்களை பொய்யாக தயார் செய்ய நான் உடந்தையாக இருந்தேன் என்றால் சரியல்ல. ஆகையால் என்னுடைய சாட்சியம் ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

**நேரம் 1.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,Arni